ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருமணிமாடக்கோயில்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருமணிமாடக்கோயில்

## பொதுத்தனியன்கள்

ராமாநுஜ த$_3$யாபாத்ரம் ஜ்ஞாநவைராக்$_3$ய பூ$_4$ஷணம் ।
ஸ்ரீமத்$_3$வேங்கடநாதா$_2$ர்யம் வந்தே$_3$ வேதா$_3$ந்ததே$_3$ஶிகம் ‖ **1** ‖

ஸ்ரீஶைலேஶ த$_3$யாபாத்ரம் தீ$_4$ப$_4$க்த்யாதி$_3$கு$_3$ணார்ணவம் ।
யதீந்த்$_3$ரப்ரவணம் வந்தே$_3$ ரம்யஜாமாதரம் முநிம் ‖ **2** ‖

லக்ஷ்மீநாத$_2$ஸமாரம்பா$_4$ம் நாத$_2$யாமுநமத்$_4$யமாம் ।
அஸ்மதா$_3$சார்யபர்யந்தாம் வந்தே$_3$ கு$_3$ருபரம்பராம் ‖ **3** ‖

யோ நித்யமச்யுதபதா$_3$ம்பு$_3$ஜயுக்$_3$மருக்ம -
வ்யாமோஹதஸ்ததி$_3$தராணி த்ரு'ணாய மேநே ।
அஸ்மத்$_3$கு$_3$ரோர்ப$_4$க$_3$வதோஸ்ய த$_3$யைகஸிந்தோ$_4$:
ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்$_3$யே ‖ **4** ‖

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூ$_4$தி:
ஸர்வம் யதே$_3$வ நியமேந மத$_3$ந்வயாநாம் ।
ஆத்$_3$யஸ்ய ந: குலபதேர்வகுளாபி$_4$ராமம்
ஸ்ரீமத் தத$_3$ங்க்$_4$ரியுக$_3$ளம் ப்ரணமாமி மூர்த்$_4$நா ‖ **5** ‖

பூ$_4$தம் ஸரஶ்ச மஹதா$_3$ஹ்வய ப$_4$ட்டநாத$_2$
ஸ்ரீப$_4$க்திஸார குலஶேக$_2$ர யோகி$_3$வாஹாந் ।

ப$_4$க்தாங்க்$_4$ரிரேணு பரகால யதீந்த்$_3$ர மிஶ்ராந்
ஶ்ரீமத் பராங்குஶமுநிம் ப்ரணதோऽஸ்மி நித்யம் ॥ **6** ॥

## பெரியாழ்வார் தனியன்கள்

கு$_3$ருமுக$_2$மநதீ$_4$த்ய ப்ராஹ வேதா$_3$நஶேஷாந்
நரபதிபரிக்லு'ப்தம் ஶுல்கமாதா$_3$துகாம: ।
ஶ்வஶுரமமரவந்த்$_3$யம் ரங்க$_3$நாத$_2$ஸ்ய ஸாக்ஷாத்
த்$_3$விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ॥

மின்னார் தட மதிள் சூழ் வில்லிபுத்தூர் என்றொரு கால் ⋆
சொன்னார் கழற்கமலம் சூடினோம் ⋆
முன்னாள் கிழி அறுத்தான் என்றுரைத்தோம் ⋆
கீழ்மையினிற் சேரும் வழி அறுத்தோம் நெஞ்சமே ! வந்து

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தான் என்று ⋆
ஈண்டிய சங்கம் எடுத்தூத ⋆
வேண்டிய வேதங்களோதி விரைந்து கிழி அறுத்தான் ⋆
பாதங்கள் யாமுடைய பற்று

## பெரியாழ்வார் திருமொழி – திருப்பல்லாண்டு

‡ பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு ⋆
பல கோடி நூறாயிரம் ⋆
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா ! ⋆
உன் சேவடி செவ்வி திருக்காப்பு ॥ **1.1.1** ॥

‡ அடியோமோடும் நின்னோடும் ⋆
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு ⋆
வடிவாய் நின் வல மார்பினில் ⋆

வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு ⋆
வடிவார் சோதி வலத்துறையும் ⋆
சுடராழியும் பல்லாண்டு ⋆
படை போர் புக்கு முழங்கும் ⋆
அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே ‖ **1.1.2** ‖

வாழாட் பட்டு நின்றீர் உள்ளீரேல் ⋆
வந்து மண்ணும் மணமும் கொண்மின் ⋆
கூழாட் பட்டு நின்றீர்களை ⋆
எங்கள் குழுவினில் புகுதலொட்டோம் ⋆
ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்கள் ⋆
இராக்கதர் வாழ் ⋆
இலங்கை பாழாளாகப் படை பொருதானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.3** ‖

ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து ⋆
எங்கள் குழாம் புகுந்து ⋆
கூடு மனம் உடையீர்கள் வரம்பொழி ⋆
வந்தொல்லைக் கூடுமினோ ⋆
நாடு நகரமும் நன்கறிய ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பாடு மனம் உடைப் பத்தர் உள்ளீர் ! ⋆
வந்து பல்லாண்டு கூறுமினே ‖ **1.1.4** ‖

அண்டக்குலத்துக்கதிபதி ஆகி ⋆
அசுரர் இராக்கதரை ⋆
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த ⋆
இருடீகேசன் தனக்கு ⋆

தொண்டக் குலத்தில் உள்ளீர் ! வந்தடி தொழுது ⋆
ஆயிர நாமம் சொல்லி ⋆
பண்டைக் குலத்தைத் தவிர்ந்து ⋆
பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே ‖ **1.1.5** ‖

எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் ⋆
ஏழ் படி கால் தொடங்கி ⋆
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம் ⋆
திருவோணத் திருவிழவில் அந்தியம் போதில் அரியுருவாகி ⋆
அரியை அழித்தவனை ⋆
பந்தனை தீரப் பல்லாண்டு ⋆
பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே ‖ **1.1.6** ‖

தீயிற் பொலிகின்ற செஞ்சுடர் ஆழி ⋆
திகழ் திருச்சக்கரத்தின் ⋆
கோயிற்பொறியாலே ஒற்றுண்டு நின்று ⋆
குடிகுடி ஆட்செய்கின்றோம் ⋆
மாயப் பொருபடை வாணனை ⋆
ஆயிரந் தோளும் பொழி குருதி பாய ⋆
சுழற்றிய ஆழி வல்லானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.7** ‖

நெய்யிடை நல்லதோர் சோறும் ⋆
நியதமும் அத்தாணிச் சேவகமும் ⋆
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு ⋆
காதுக்குக் குண்டலமும் ⋆
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து ⋆
என்னை வெள்ளுயிர் ஆக்க வல்ல ⋆

பையுடை நாகப் பகைக்கொடியானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுவனே ‖ **1.1.8** ‖

உடுத்துக் களைந்த நின் பீதகவாடை உடுத்துக் ⋆
கலத்ததுண்டு ⋆
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன ⋆
சூடுமித்தொண்டர்களோம் ⋆
விடுத்த திசைக் கருமம் திருத்தித் ⋆
திருவோணத் திருவிழவில் ⋆
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.9** ‖

எந்நாள் எம்பெருமான் ⋆
உன்தனக்கடியோம் என்றெழுத்துப்பட்ட அந்நாளே ⋆
அடியோங்கள் அடிக்குடில் ⋆
வீடு பெற்றுய்ந்தது காண் ⋆
செந்நாள் தோற்றித் ⋆
திருமதுரையுள் சிலைகுனித்து ⋆
ஐந்தலைய பைந்நாகத் தலை பாய்ந்தவனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.10** ‖

‡ அல்வழக்கொன்றும் இல்லா ⋆
அணி கோட்டியர் கோன் ⋆
அபிமான துங்கன் செல்வனைப்போலத் ⋆
திருமாலே ! நானும் உனக்குப் பழவடியேன் ⋆
நல்வகையால் நமோ நாராயணாவென்று ⋆
நாமம் பல பரவி ⋆

பல்வகையாலும் பவித்திரனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.11** ॥

‡ பல்லாண்டென்று பவித்திரனைப் ⋆
பரமேட்டியை ⋆
சார்ங்கம் என்னும் வில்லாண்டான் தன்னை ⋆
வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பிய சொல் ⋆
நல்லாண்டென்று நவின்றுரைப்பார் ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பல்லாண்டும் பரமாத்மனைச் ⋆
சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே ॥ **1.1.12** ॥

## பெரிய திருமொழி – நந்தாவிளக்கு

‡ நந்தா விளக்கே ! அளத்தற்கரியாய் ! ⋆
நர நாரணனே ! கரு மா முகில் போல் எந்தாய் ⋆
எமக்கே அருளாய் என நின்று ⋆
இமையோர் பரவும் இடம் ⋆
எத்திசையும் கந்தாரம் அந்தேன் இசை பாட மாடே ⋆
களி வண்டு மிழற்ற நிழல் துதைந்து ⋆
மந்தாரம் நின்று மண மல்கு நாங்கூர் ⋆
மணிமாடக் கோயில் வணங்கென் மனனே ॥ **3.8.1** ॥

முதலைத் தனி மா முரண் தீர அன்று ⋆
முது நீர்த் தடத்துச் செங்கண் வேழம் உய்ய ⋆
விதலைத் தலைச் சென்றதற்கே உதவி ⋆
வினை தீர்த்த அம்மான் இடம் ⋆
விண் அணவும் பதலைக் கபோதத்தொளி மாட நெற்றிப் ⋆
பவளக் கொழுங்கால பைங்கால் புறவம் ⋆

மதலைத் தலை மென் பெடை கூடு நாங்கூர் ⋆
மணிமாடக் கோயில் வணங்கென் மனனே ! ‖ **3.8.2** ‖

கொலைப் புண் தலைக் குன்றம் ஒன்றுய்ய ⋆
அன்று கொடு மா முதலைக்கிடர் செய்து ⋆
கொங்கார் இலைப் புண்டரீகத்தவள் இன்பம் ⋆
அன்போடணைந்திட்ட அம்மான் இடம் ⋆
ஆள் அரியால் அலைப்புண்ட யானை மருப்பும் அகிலும் ⋆
அணி முத்தும் வெண் சாமரையோடு ⋆
பொன்னி மலைப் பண்டம் அண்டத் திரை உந்து நாங்கூர் ⋆
மணிமாடக் கோயில் வணங்கென் மனனே ‖ **3.8.3** ‖

சிறை ஆர் உவணப் புள் ஒன்றேறி ⋆
அன்று திசை நான்கும் நான்கும் இரிய ⋆
செருவில் கறை ஆர் நெடு வேல் அரக்கர் மடியக் ⋆
கடல் சூழ் இலங்கை கடந்தான் இடம் தான் ⋆
முறையால் வளர்க்கின்ற முத் தீயர் நால் வேதர் ⋆
ஐ வேள்வி ஆறங்கர் ஏழின் இசையோர் ⋆
மறையோர் வணங்கப் புகழ் எய்து நாங்கூர் ⋆
மணிமாடக் கோயில் வணங்கென் மனனே ! ‖ **3.8.4** ‖

இழை ஆடு கொங்கைத் தலை நஞ்சம் உண்டிட்டு ⋆
இளம் கன்று கொண்டு விளங்காய் எறிந்து ⋆
தழை வாட வன் தாள் குருந்தம் ஒசித்துத் ⋆
தடம் தாமரைப் பொய்கை புக்கான் இடந்தான் ⋆
குழை ஆட வல்லிக் குலம் ஆட மாடே ⋆
குயில் கூவ நீடு கொடி மாடம் மல்கு ⋆

மழை ஆடு சோலை மயில் ஆலு நாங்கூர் ⋆
மணிமாடக் கோயில் வணங்கென் மனனே ‖ **3.8.5** ‖

பண் நேர் மொழி ஆய்ச்சியர் அஞ்ச ⋆
வஞ்சப் பகு வாய்க் கழுதுக்கிரங்காது ⋆
அவள் தன் உண்ணா முலை மற்றவள் ஆவியோடும் ⋆
உடனே சுவைத்தான் இடம் ⋆
ஓங்கு பைந் தாள் கண்ணார் கரும்பின் கழை தின்று வைகிக் ⋆
கழு நீரில் மூழ்கிச் செழு நீர்த் தடத்து ⋆
மண் ஏந்திள மேதிகள் வைகு நாங்கூர் ⋆
மணிமாடக் கோயில் வணங்கென் மனனே ‖ **3.8.6** ‖

தளைக் கட்டவிழ் தாமரை வைகு பொய்கைத் ⋆
தடம் புக்கடங்கா விடம் கால் அரவம் ⋆
இளைக்கத் திளைத்திட்டதன் உச்சி தன் மேல் ⋆
அடி வைத்த அம்மான் இடம் ⋆
மா மதியம் திளைக்கும் கொடி மாளிகை சூழ் ⋆
தெருவில் செழு முத்து வெண்ணெற்கெனச் சென்று ⋆
முன்றில் வளைக்கை நுளைப் பாவையர் மாறு நாங்கூர் ⋆
மணிமாடக் கோயில் வணங்கென் மனனே ‖ **3.8.7** ‖

துளையார் கரு மென் குழல் ஆய்ச்சியர் தம் ⋆
துகில் வாரியும் சிற்றில் சிதைத்தும் ⋆
முற்றா இளையார் விளையாட்டொடு காதல் வெள்ளம் ⋆
விளைவித்த அம்மான் இடம் ⋆
வேல் நெடுங்கண் முளை வாள் எயிற்று மடவார் பயிற்று ⋆
மொழி கேட்டிருந்து முதிராத இன் சொல் ⋆

வளை வாய கிள்ளை மறை பாடு நாங்கூர் ⋆
மணிமாடக் கோயில் வணங்கென் மனனே ॥ **3.8.8** ॥

விடை ஓட வென்றாய்ச்சி மென் தோள் நயந்த ⋆
விகிர்தா ! விளங்கு சுடர் ஆழி என்னும் ⋆
படையோடு சங்கொன்றுடையாய் ! என நின்று ⋆
இமையோர் பரவும் இடம் ⋆
பைந்தடத்துப் பெடையோடு செங்கால அன்னம் துகைப்பத் ⋆
தொகைப் புண்டரீகத்திடைச் செங்கழுநீர் ⋆
மடையோட நின்று மது விம்மு நாங்கூர் ⋆
மணிமாடக் கோயில் வணங்கென் மனனே ॥ **3.8.9** ॥

‡ வண்டார் பொழில் சூழ்ந்தழகாய நாங்கூர் ⋆
மணிமாடக் கோயில் நெடுமாலுக்கு ⋆
என்றும் தொண்டாய தொல் சீர் வயல் மங்கையர் கோன் ⋆
கலியன் ஒலி செய் தமிழ் மாலை வல்லார் ⋆
கண்டார் வணங்கக் களி யானை மீதே ⋆
கடல் சூழ் உலகுக்கொரு காவலராய் ⋆
விண் தோய் நெடு வெண் குடை நீழலின் கீழ் ⋆
விரி நீர் உலகாண்டு விரும்புவரே ॥ **3.8.10** ॥

## பெரிய திருமொழி – ஒருநல் சுற்றம்

வேலை ஆல் இலைப் ⋆
பள்ளி விரும்பிய ⋆
பாலை ஆர் அமுதத்தினைப் ⋆
பைந்துழாய் ⋆
மாலை ஆலியில் ⋆
கண்டு மகிழ்ந்து போய் ⋆

ஞாலம் உன்னியைக் காண்டும் ⋆
நாங்கூரிலே ‖ **10.1.3** ‖

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – பெரிய திருமடல்

நீர்மலை மேல்
மன்னு மறை நான்கும் ஆனானை ⋆
புல்லாணித் தென்னன் தமிழை வட மொழியை ⋆
நாங்கூரில் மன்னு மணி மாடக் கோயில் மணாளனை ⋆
நல் நீர்த் தலைச்சங்க நாண் மதியை ‖ **72** ‖

திரு புண்டரீகவல்லித்தாயார் சமேத நாராயணன் திருவடிகளே சரணம்